CMG
JAFFNA

# துளிர்

வளர்ச்சி - 01 மாசி - 2003 பிறப்பு - 05

அனுசரணை
சிறுவர் பாதுகாப்பு
146, கோவில் வீதி,
நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

வட இலங்கைப்பத்திரிகையாளர் சங்கம்,
18, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.




Design by : Mouse

வெளியீடு
சிறுவர் ஊடகத்துறை

அன்பளிப்பு - 10.00

# பதிப்பாசிரியரின் பேனாவிலிருந்து...

அணைத்து ஆக்கி வளர்த்த "துளிர்" தளிர் கரங்களால் ஐந்தாவது இதழை முகிழந்த்திருக்கின்றது. சிறார் உலகின் படைப்பிலக்கியங்கள் நீராகவும் பசளையாவுங் கொண்டு துளிர்க்கும் இவ்விதழ் மேலும் பெருகி வளர, ஆக்கங்களை அனுப்புதல் இளஞ் சிறார்களுக்கான அங்கீகாரமாகும்.

''வீதியில் விளையாடிக் கொண்டிருக்கும் இச் சிறார்களின் குறும்புகளைக் கண்ட இறைவன் பூசாரியின் பூசையைக்கூட மறந்துவிடுகிறான்" என்றான் ஒரு தத்துவஞானி. உண்மையில் சிறார் உலகு பக்கச் சார்பற்றுக் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என வாழும் சமுதாயம். அரசியல் சேற்று வாடை அறியாத வெள்ளைகள். இன்று இவை அரசியல் வியாபாரப் பொருட்களாக, காட்சிப் படிவுகளாக மாற்றப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். அடுத்த சந்ததியின் "வரலாற்றுக் காவிகள் " என்பதை யாரும் மறக்கக்கூடாது.

"பல்லாயிரக் கணக்கான சிறுசுகள் இன்று விதியின் விளிம்பில் விளையாடிக் கொண்டிருக்கின்றன'' என்று குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கக் காத்திருக்கும் அரசியல் வல்லூறுகளின் பொய்ப் பிரசாரங்களுக்கு ஆப்பு வைத்தாற்போல், ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கரோல் பெலாமி "விடுதலைப் புலிகள் சர்வதேச இணக்கத்திற்கமைய நடந்து கொள்வதில் உறுதியாக இருக்கிறார்கள் எனவும், அவர்களின் செயற்பாடுகள் எனக்கு மிக நம்பிக்கை தருகிறது". என்றார்.

அண்மையில் யாழ்மாவட்ட சர்வோதய அமைப்பின் அனுசரணையுடன் மனித உரிமைகள் ஆணைக் குழுவினரால் நடாத்தப்பட்ட மனித உரிமைகள் சம்பந்தமான பயிற்சிப் பட்டறையில் தெற்குடன் ஒப்பிடுகையில் வடக்குக் கிழக்கில் சிறுவர் துஷ்பிரயோகம் குறைவாகவே உள்ளதாகவும் தெற்கில் சிறுவர் நலன் பேணப்படாமைக்குச் சமூக விரோதக் கும்பல்களின் தனித்துவமான ஆளுமை பிரயோகிக்கப்படுவதாகவும் அவ்வாறான ஓர் நிலைமை வடக்குக் கிழக்கில் இப்போதைக்கு அதிகரித்த அளவில் இல்லை எனவும், அங்கு குறிப்பிடப்பட்டதாகப் பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

ஊனமுற்ற பகுதிகள் உயிரூட்டப்பட வேண்டும், சிறுவருலகு செம்மையாகப் பாதுகாக்கப்படல் வேண்டும், இலங்கை மட்டுமல்ல ஈராக்,பாலஸ்தீனம் போன்ற மத்திய கிழக்கு நாடுகளோடு நின்றுவிடாது, ஒட்டுமொத்த உலகச் சிறார்கள் நலன்கள் பாதுகாககப் படவேண்டும் என முதலைக் கண்ணீர் வடிக்கின்ற உலக சமூகம்,ஈராக் மீது போர் தொடுக்கக் கூடாது என்ற பரிசுத்த பாப்பரசரின் போதனைகளைச் செவிமடுப்பதுடன் அவை செயல் வடிவமும் பெற உழைக்க வேண்டும். வரலாற்றுத் தூண்களைப் பேணுதல் மூலமே பலமான உலகு பாதுகாக்கப்படும். அத்திபாரம் பிழைக்குமாயின் அழகு மாளிகை அலங்கோலமாகும் என்பதுதான் உண்மை.

**அன்புடன் ஆசிரியர்.**

# அவன் உயர்ந்து விட்டான்

அன்றும் அதே போல தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்தான் கந்தன் அன்றைய வேலை அவனுக்கு முன்பு இல்லாதது போன்று இன்று பெரும் சுமையாக இருந்தது. அவனுடைய முதுகுக்குப் பின்புறம் தானாக வலியெடுத்துப் பெரும் விஸ்வருபம் பெற்றுக் கொண்டிருப்பதை அவனால் மெல்ல மெல்ல உணர முடிந்தது. இவற்றை நினைத்துத் தானாக அவனுடைய கண்களிலிருந்து கண்ணீர் வடிய, அவனுடைய மனமோ மெல்லப் பின் நோக்கி நகர்ந்தது.

அன்று காலைப்பொழுது இனிமையாக விடிந்துகொண்டிருந்தது. நேரமும் காலை ஆறு மணி என்பதைக்காட்டி தனது ஓசையால் அதை வெளிப்படுத்தியது. கணவன் தோட்டத்திற்கு போக வேண்டும் என்தற்காக மிக விரைவாக எழுந்து மங்கம்மா தேனீர்ப் பானையை அடுப்பில் வைக்கின்றாள். பாடசாலைக்கு போகவேண்டும் என்கின்ற கவலையே சிறிதும் இல்லாமல் பாயில் சுடுண்டு கிடக்கிறார்கள் அவளின் மூன்று பிள்ளைகள். ஆம் அவர்களே பாலன் குரு, மீரா என்பவர்கள். மங்கம்மா தேனீர் கோப்பையுடன் கணவனிடம் வருகின்றாள். "இஞ்சருங்கோ எழும்புங்கோவன் தோட்டத் திற்குப் போக வேணுமல்லோ தேநீரைக் குடித்துவிட்டு நடவுங்கோ" என்று கணவனை எழுப்பி விட்டு பிள்ளைகளிடம் வந்து "டேய்" எழும்புங்கோவன் பள்ளிக்கூடம் போகின்ற நினைப்பு கொஞ்சமும் இல்லை என்று அதட்டி பிள்ளைகளை எழுப்புகின்றார். குருவும் மீனாவும் எழும்ப பாலன் மறுபக்கமாக திரும்பி படுக்கின்றான். "டேய் தம்பி பள்ளிக்கூடம் போகவேணுமெல்லோ" எழுப்புகிறாள் மங்கம்மா. "போம்மா பள்ளிக்கூடமும் நீயும் பள்ளிக்கூடம் போனால் வாத்தியார் தொல்லை இங்க இருந்தால் உன்னுடைய தொல்லை எங்க தான் போறது" தம்பி என்னடா வாத்தியார் சொன்னவர் ஆறுதலாக மங்கம்மா. அம்மா அந்தப் பரீட்சைக்காசு கட்ட வேணும் வைச்சிருக்கிறியா? உடுப்புத் தோய்க்க வேணும், சவுக்காரம் இருக்கா? பாலனிடமிருந்துகேள்விகள் எழுந்தன. "தம்பி, என்னப்பா செய்யிறது! அப்பாவும் என்னொராளோடைதான் வேலைக்குப் போறவர்...அவர் கொண்டுவாற காசு சாப்பாட்டுக்கே போதாது. நான் என்ன செய்யிறது... எப்பிடியும் நாளைக்கு வாங்கித் தாறன்... இண்டைக்குப் போ ராசா.." என்றவாறு அவனை எழுப்புகின்றாள்.

"இண்டைக்கு வாத்தியார் ஏதாவது கதைத்தால் பள்ளிக்கூடத்தை விட்டுட்டு ஓடி வந்திடுவன்..."என்று கூறிவிட்டு முகத்தைக் கழுவிக் கொண்டு பாடசாலைக்குச் செல்லஆயத்தமானான் பாலன். அன்று அவனுடைய உடுப்பு அசிங்கமாகவும் ஊத்தையாகவும் காணப்பட்டது. அதைப் பார்த்தபோதுஅவனுடைய உள்மனம் அழுதது! இண்டைக்கு வாத்தியாரிட்டை செமச்சாத்தல் தான்...கடவுளே..என்னைக் காப்பாற்று.....என்று வேண்டிக் கொண்டு புறப்பட்டான். பாடசாலை ஆரம்பமாகி முதல் பாடவேளை மனதுக்குள் ஆயிரம் கடவுளைப் பிரார்த்தவாறு அமர்ந்திருந்தான் பாலன். "குட்மோர்ணிங் சார்" என்ற மாணவர்களின் இரைச்சல்.

பெரிய நீளக் கம்பு ஒன்றுடன் வகுப்பறைக்குள் நுழைந்தார் சண்முகம் இந்த உடுப்புத் தோய்க்காமல் இங்கை வரக்கூடாது....பரீட்சைக் காசு கொண்டு வந்தனியோ? என்று இரைந்தார் சண்முகம் வாத்தியார். மவுனமாகத்

தொடர்ச்சி 13ம் பக்கம்...

# வல்லமை கொண்டவன் நீ

சிறுவனே............
உனக்கு உரிமையுண்டு
ஆயிரம் கடமையுண்டு.
ஆனால்.....

உன் உரிமைகளை நீயே
உரமிழக்க வைக்காதே
உன் கடமைகளை நீயே
கைநழுவ விடாதே
உலகத்தின் திலகம் நீ
உலகத்தை ஆளும்
வல்லமை கொண்டவன் நீ
உலகைத் தீமைகளாலே
சூழ வைக்காதே.

எழுச்சி கண்டிடு - ஆனால்
வீழ்ச்சி கண்டிடாதே...

போதையில் சிக்கி
பாதை மாறாதே.....புதிய
பாதையில் பயணித்திடு

சி.த..கவீநேசன்.



# தற்போது ஏற்பட்டுள்ள சமாதானம் யாழ்.குடாநாட்டுச் சிறுவர்களுக்கு நன்மையா? தீமையா?

கட்டுரை

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற் கைச்சாத்திடப்பட்டு ஒரு ஆண்டு காலத்தைத் தாண்டிவிட்டது! சமாதானம் மலர்ந்து இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் சாதகமாகவே அமைந்துள்ளது எனக் கூறலாம். எனினும் யாழ். மாவட்டச் சிறுவர்களுக்கு எப்படி அமைந்திருக்கின்றது என்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

கடந்த இருபது ஆண்டுகால யுத்தம் தற்போது ஓய்ந்து சமாதான சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் வேளையில் யுத்த காலங்களில் சிறுவர்கள் எதிர்நோக்கிய பிரச்சனைகள், இழப்புக்கள் அதிகம் குறைந்துள்ளன. அந்த வகையில் போர் இடம்பெற்ற காலங்களில் குண்டுத் தாக்குதல்கள் மத்தியிலும் இராணுவ நடவடிக்கைகளாலும் குடாநாட்டுச் சிறுவர்கள் பெரும் சிரமங்களின் மத்தியிலும் தங்கள் கல்வி நடவடிக்கைகளைமேற்கொள்ள வேண்டியிருந்தது.

அந்நிலை இப்போது முற்றும் குறைவடைந்துள்ளது. தங்கள் கல்வி நடவடிக்கைகளைச் சரிவரச் செய்யவும் அமைதியான சூழ்நிலை உருவாகியுள்ளது. இருந்த போதிலும் யுத்த காலங்களிலும் பல்வேறு சிரமங்கள் மத்தியிலும் மரநிழல்களிலும் இருந்து கற்றுவந்த சிறுவர்களின் கல்விசார் புள்ளிவிபரங்கள் மிகநன்றாகவே இருந்தன. கல்வி நடவடிக்கைகளினால் ஏற்படும்சவால்களுக்கும் முகங்கொடுக்கத் தயாராகவும் இருந்தனர். எனினும் தற்போதைய சமாதான சூழ்நிலையால் இந்நடவடிக்கைகள் மந்த நிலையிற் காணப்படுவதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. இதற்குக் காரணங்கள் பல உள்ளன குடாநாட்டுச் சிறுவர்கள் போர்க் காலங்களில் பல வகையான இழப்புக்களைச் சந்தித்தனர் ஊனமடைதல், அநாதைகளாதல உயிரிழப்புப் போன்ற இன்னோரன்ன பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய பல்வேறு அனர்த்தங்கள் காணப்பட்டன. தற்போது அந்நிலை மாறியுள்ளது. ஊனமடையும் சிறுவர்களின் எண்ணிக்கை, உயிரிழக்கும் சூழ்நிலை என்பன குறைவடைந்தே காணப்படுகின்றன. இருந்த போதிலும் சிறுவர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் இன்னும் புதிய வடிவங்கள் எடுக்கின்றன. உதாரணமாக வெள்ளை வான் கடத்தல் போன்ற பாரிய செயல்களும், சிறுவர் கடத்தல்களும் இன்னும் உலகம் அறியாத பல்வேறு பிரச்சினைகளும் குடாநாட்டுச் சிறுவர்களைப் பின்தொடர்கின்றன.

கடந்தகால யுத்தத்தினால் குடாநாட்டுச் சிறுவர்கள் இடம்பெயர்ந்து அகதி முகாங்களிலும் கோயில்களிலும் தஞ்சமடைந்து கிணற்றுத் தவளைகள் போல அடைபட்டிருந்தார்கள். தற்போது, வெளிச் சத்திற்கு வந்துள்ளனர். உலகினை அறியக்கூடியதாக இருக்கின்றது. இதன் பிரகாரம் யாழ்.குடாநாட்டுச் சிறுவர்களின் சுற்றுலாத்துறை வளர்ச்சி கண்டுள்ளது சகல இலங்கையையுமே கண்கள் ஊடாகக் காணும் சந்தர்ப்பம் சிறுவர்களுக்குக் கிடைத்துள்ளது. இது சந்தோஷமான ஒரு செய்தியாகவும் அமைகின்றது இந்தச் சூழ்நிலையிலும் சிறுவர்கள் பல பிரச்சனை களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது யாழ்.குடாநாட்டுச் சிறுவர்கள் சமாதான

காலத்தில் காலடி எடுத்து வைத்ததும் தமது மரபு, வரலாற்று ரீதியான சுற்றுலாகளுக்கும் அப்பாற்பட்டதேவையற்ற புறக்கணிப்புகளுக்கு உள்ளாக்கப்படும் காட்களையே காணச் செல்கின்றனர்.

முன்னைய காலத்தில் குண்டுச் சத்தங்களில் பொழுதைக் கழித்த சிறுவர்கள் தற்போது பட்டாசுகளுடனும், மத்தாப்புகக்களுடனும் தமது பேரின்பத்தை வெளிக்காட்டுகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதானம் யாழ்.குடாநாட்டுச் சிறுவர்களுக்கு கூடிய சாதகமான நன்மைகளை அளித்தாலும் புதிய பிரச்சனைகள், தீமைகள் சிறுவர்களைத் தொடர்வது கவலைக்குரிய விடயமாகும். எனவே இதில் அக்கறை கொண்டு இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் எனும் வாக்குக்கேற்ப வாழவும், நவீன உலகினை நோக்கிப் பயணம்செய்யவும் ஏதுவான நடவடிக்கைகளை அனைத்து அமைப்புக்களும் பொது மக்களும் சிறுவர் நலனில் அக்கறை கொண்டு செயற்பட்டு, யாழ்.குடாநாட்டுச் சிறுவர்கள் சமாதான காலத்தில் விருத்தியடைய ஏதுவான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

ம.துலிப்கஸ்பார்,
10ம் வட்டாரம் மத்தி,
நெடுந்தீவு.

# தெரிந்துகொள்ளுங்கள்......

01. எட்னா எரிமலை எங்கேயுள்ளது?
02 ஆறுகள் இல்லாத நாடு எது?
03. 1000 ஏரிகளைக் கொண்ட நாடு எது?
04. உலகின் பொலிஸ்காரன் அழைக்கப்படும் நாடு எது?
05. தங்கப் போர்வை நாடு எது?
06. உலகின் சின்னம் என அழைக்கப்படும் நாடு எது?
07. உலகின் கூரை என அழைக்கப்படும் நாடு எது?
08. உலகில் அதிக எண்ணெய் வளம் கொண்ட நாடு எது?
09. ஒஸ்கார் விருது எந்தத் துறைக்கு வழங்கப்படுகின்றது?
10. கழுகைத் தேசியப் பறவையாகக் கொண்ட நாடு எது?
11. நோர்வேயின் சனத் தொகை எவ்வளவு?

விடைகள் 14ம் பக்கம்

# சிறார்கள் கோபத்துடன் வளரலாமா?

செல்வத்திலே சிறந்த செல்வம் குழந்தைச் செல்வம். அப்படிப்பட்ட விலை மதிப்பற்ற செல்வங்கள் நாளைய தலைவர்கள். இத் தலைவர்கள் தமது இளமைக் காலத்தைக் கோபத்துடன் கழிக்கலாமா? நிச்சயமாகமுடியாது. எனவே பெற்றோர்களே, உங்கள் சிறார்களின் இளமைக் காலத்தைக் கோபத்துடன் கழிக்க விட்டுவிடாதீர்கள். நாளைய சமுதாயத்தை நல்ல வழியில் கொண்டு செல்வதற்குச் சிறார்கள் கோபத்தைக் கட்டுப்படுத்துதல் வேண்டும்.

ஆணினதும் பெண்ணினதும் அன்பின் சின்னமாக விளங்கும் குழந்தைச் செல்வமானது அப்பெற்றோரின் வழக்கத்தைக் கடைப் பிடிக்கின்றது. எனவே பெற்றோர் குழந்தைகளிற்கு நல்ல முன்மாதிரியாக இருக்க வேண்டும். குறிப்பாக அவர்களை வெறுப்புட்டி அவர்களது மகிழ்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் பங்கம் விளைவிக்கலாகாது.

குழந்தைகளை எப்போதும் மன மகிழ்ச்சியாக இருக்கும் படி பார்த்துக் கொள்ள வேண்டும். அதுவே எல்லோரையும் கவரச் செய்யும் என்பதுடன் நீண்ட நாட்கள் வாழவும் இந்த மன மகிழ்ச்சியும் ஒரு காரணமாக அமைகின்றது.

சில குழந்தைகள் பிறக்கும்போதே சிடுசிடுப்புக் குணத்துடன் பிறக்கின்றார்கள். இப்பழக்கம் நாளடைவில் தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்னும் வழக்கத்திற்கேற்ப அது வாழ்நாள் முழுவதுமே அவர்களது பழக்கமாக மாறி விடுகின்றது. இதனால் இவர்கள் சமூகத்தின் பார்வையில் இருந்து பின் தள்ளப்படுவதுடன் இவர்களது இப்போக்குப் பலரது வெறுப்பையும் தாமாகவே பெற்றுக் கொள்ளவேண்டியேற்படுகின்றது. தொட்டதிற்கெல்லாம் எரிந்து விழுந்தும், உதாசீனப்படுத்தும் முன்கோபிகளான இவர்களிடத்தில் யார்தான் நேசம் கொள்வார்கள்? எனவே தான் பெரியோர்கள் சிறார்களை ஆரம்ப காலத்திலிருந்தே மகிழ்ச்சியான மனோபாவத்துடன் எதையும் மனங்கோணாமல் புன்னகையுடன் ஏற்கும் நல்ல குணவியல்பு கொண்டவர்களாக வளர்த்தெடுக்க வேண்டும்.

தத்தம் வீடுகளில் வெறுப்போடும் எந்நேரமும் சிடுசிடுப்பாக இருக்கும் பெற்றோர்கள் தமது மகிழ்வுக்குப் பங்கம் விளைவிப்பதுடன் சிறார்களின் மகிழ்வுக்கும் பங்கம் விளைவிக்கின்றார்கள். இதனால் அன்பிற்காக ஏங்கித் தவிக்கும் குழந்தையானது நாளடைவில் அன்பு, பாசத்தை மறந்து விரக்தியில் வாழத் தலைப்படுகின்றது. இப்போக்கு நீடிக்கும்போது மனமுடைந்து தனிமைச் சூழலை நாடுகின்றது.

எனவே குழந்தைகளை அன்புடன் மகிழ்ச்சியான சூழலில் வளர்க்கவேண்டும். அப்போதுதான் அவர்கள் பெரியவர்களான பின்பு தம் ஆளுமையால் நன்மதிப்பைப் பெறும் வண்ணம் அனை வரையும் கவர்ந்து கொள்கிறார்கள். குழந்தைகளின் முழு மகிழ்ச்சியும் பெற்றோரின் தோழமையிலேயே தங்கியுள்ளது. பெற்றோர்களே! உங்கள் சிறார்கள் நாளைய தலைவர்களாக மிளிர அவர்களை அன்புடன் பராமரியுங்கள்.

V.மேனகா
(யா/வேம்படி மகளிர் கல்லூரி.)



# பொது அறிவு

01. சிறுவர்களின் நீண்டகால சமூக அபிவிருத்திக்கு மிகவும் உதவி வழங்கும் நிறுவனம் எது?
02. சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அலுவலகம் எங்கு அமைந்துள்ளது?
03. ஐக்கிய அமெரிக்காவின் பதினாறாவது ஜனாதிபதி யார்?
04. உலகிலேயே மிகப் பெரிய நூலகம் எது?
05. 2002 உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற நாடுஎது?
06. உலகிலேயே மிகப் பெரிய முஸ்லிம் நாடு எது?
07. ஆசிய அபிவிருத்தி வங்கி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
08. உலகிலேயே அதிக அளவு அகதிகளைக் கொண்ட நாடு எது?
09. எந்த ஆண்டில் கொழும்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது?
10. உலகில் அதிக மொழிகளில் வெளியிடப்பட்ட சமய நூல் எது?

## விடைகள்...

1. யுனிசெவ்
2. சுவிற்சிலாந்தில் உள்ள ஜெனீவா நகரம்.
3. ஆபிரகாம் லிங்கன்.
4. லெனின் நூலகம்.
5. பிரேசில்
6. இந்தோனேசியா.
7. 1945-ம் ஆண்டு.
8. சோமாலியா.
9. 1950-ம் ஆண்டு.
10. திரு விவிலியம் (Bible)



### சிறுவர்களே!

உங்களுக்கு அறிமுகமில்லாத பொருட்களை கையாள வேண்டாம். ஏன்னெனில் அவை உங்கள் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியன.

இவற்றை கண்டால்

1. விலகிச்செல்லவும்
2. பெரியவர்களுக்கு தெரியப்படுத்தவும்

# நட்பு எனது கற்பு

(சென்ற இதழ் தொடர்சி.............)

....ஆனால் அப்பாவோ நான் கூறியதை ஏற்க அடியோடு மறுத்துவிட்டார். "றோட்டாலைபோறவன் வாறவனுக் கெல்லாம் நாங்கள் உதவி செய்யப்போனால் கடைசியாக நாங்கள் தான் றோட்டுக்கு வரணும், யாரோ ஒருவன் பணக்காரனா இருந்தா இன்னொருத்தன் ஏழையா இருந்துதான் ஆகணும்! இதுதான் உலக நியதி, காலத்தின் கட்டளை. நான் உன்ர கிட்டுவுக்கு உதவி செய்தால் நீ இன்னும் இன்னும் ஆயிரம் கிட்டுக்களைக் கூட்டி வருவாய்! அப்போதெல்லாம் உன்ர சொல்லை நான் கேட்டால் அந்தக் கிட்டுக்களில் நீயும் ஒருவனாய் மாறவேண்டி வந்திடும். - இந்த யுத்தத்தாலை உன்ர கிட்டு மட்டுமில்லையடா...ஆயிரம் கிட்டுக்கள் வேதனையிலும் சோதனையிலும் வெந்து, வெந்து செத்துக்கிட்டுத்தான் இருக்கி றானுங்கள்.அவங்களின்ர துன்பங்களை யெல்லாம் உன்னாலை நீக்க முடியுமா?"

என்று அப்பா ஒரு கதாப் பிரசங்கமே நடாத்தி முடித்திருந்தார். ஆனால் நான் கொண்ட கொள்கையைக் கொள்ளை போக விடாது தொடர்ந்து அடம்பிடித்தேன். ஆர்ப்பாட்டம் செய்தேன். கிட்டுவின் மீது நான் கொண்ட பிடிமானத்தையும், என்னுடைய தொடர் பிடிவாதத்தையும் கண்ட அப்பா மனம் இரங்கினார். தனது நிலையில் இருந்து இறங்கினார். உதவி செய்யமுன்வந்தார். அவன் வாழ்வினில் வசந்தம் வீசச்செய்ய, அவனும் குடும்பமும் உய்யச்செய்யஅப்பாமுன் வந்தார். எனக்குள் ஆயிரம் பட்டாம்பூச்சிகள் சிறகடித்தன. என்றுமே இல்லாத மகிழ்ச்சி என்னை ஆட்கொண்டது. எனக்கு இந்த வாழ்க்கையில் மறக்கவும் முடியாது. ஆனால் அப்பா சொன்ன சில வாத்த்தைகள் என் நெஞ்சில் உறைத்தன. ஏதேதோ சேதிகள் உரைத்தன. மகிழ்ச்சியை வார்த்தைகளுக்குள் வசப் படுத்தவும் முடியாது. என் "உன்ர கிட்டு மாதிரி ஆயிரம் ஆயிரம் கிட்டுக்கள் சோதனையிலும், வேதனையிலும் வெந்து வெந்து செத்துக்கிட்டுத்தான் இருக்கிறா னுங்கள். அவங்களின்ர துன்பத்தை யெல்லாம் உன்னால நீக்க முடியுமா?" இந்த வார்த்தைகள்தான் என் நெஞ்சத்தை அடிநெருடியது.

எனக்குள் ஒரு தீர்மானம் சேர்மானமானது. ஏதோ ஒரு வைராக்கியம் என்னுள் புகுந்தது. ஏதேதோ திட்டங்கள் வகுத்தது.

என்றோ ஒரு நாள் என் இலட்சியம் சிகரத்தை எட்டும் என்ற நம்பிக்கைச் சிசுக்கள் என்னுள் கருவுயிர்த்துக் கொண்டன.

கிட்டுவைக் காணவேண்டும் என்ற அவாவும், நான் எனக்குள் இட்ட சவாலும், என் நயனங்களில் நீண்ட பயணங்கள் செய்ய, கிட்டுவையும் என் திட்டத்தில் இணைப்பது என்ற தீர்மானமும் சேர்மானமாக, கிட்டுவைக் காண்பதற்காக அவனது வீடு நோக்கி விரைந்தேன்.

***

கிட்டு அப்பாவின் உதவியை முதலிலே மறுத்தான். என்னுடைய கோரிக்கையும் அன்புக் கட்டளையும் அவனை அடிபணிய வைத்தது. அணுகுண்டால்கூட உலகத்தை வென்றுவிட முடியாது. ஆனால்...

(இன்னும் வளரும்)

# ஒற்றுமையே பலம்

கதா பாத்திரங்கள்

கமலா :- மாலாவின் தாய்
மாலா :- பாடசாலை மாணவி.
சுதா,ரமணி,ராதா :- பாடசாலை மாணவிகள்.
கலா:- மாலாவின் நண்பி.
சுமதி:- சுதாவின் தாய்.

## காட்சி - 01

(கமாலா, தந்தையார் இறந்து தாயாருடன் வசித்து வருகின்றாள். அவள் பாடசாலை செல்பவள்.)

**கமலா:** பிள்ளை மாலா! பாடசாலைக்குப் போகேலையா? ஏன் இன்னும் வெளிக்கிடாமல் நிக்கிறாய்?

**மாலா:** நான் இண்டைக்குப் போகவில்லை. ரீச்சர் சப்பாத்துப் போடவில்லை என்று அடிப்பா. இன்றைக்குத்தான் கடைசி நாள் என்று சொன்னவ. அதோடை தமிழ் கணப்பீடுசெய்யப் பயிலும் Typing Sheet உம் வாங்கவேணும். காசு....இருந்தால் தாங்கோ.

**கமலா:** பத்து ரூபாதான் இருக்கு. இதைக் கொண்டுபோய் வாங்கு. சப்பாத்துக்குப் பிறகு பார்ப்போம்.

**மாலா:** இப்ப என்ன சாப்பாடு இருக்கு? மத்தியானம் இடைவெளிக்கு எல்லாப் பிள்ளைகளும் கொண்டுவந்து சாப்பிடுவினம் நான்மட்டும் பாத்துக்கொண்டு நிக்கிறதோ

**கமலா:** சாப்பிடுறதுக்கு நேற்றைக்குக் கொண்டுவந்த சோறும்மிளகாய்ப் பொரியலும் இருக்கு. அதைச்சாப்பிட்டுட்டு போ.....

**மாலா:** எனக்கும் நேரம் போட்டுது. போட்டு வாறேன் அம்மா. எனக்கு வேலைக்குப் போக நேரம் வந்திட்டுது. அந்த வீட்டு அம்மா ஏசுவா

**கமலா:** பள்ளிக்குடத்தாலை வரும்போது அந்த வீட்டை வந்துட்டுப் போ..என்ன.

**மாலா:** ஓம் அம்மா.

## காட்சி - 02

இடம்: பாடசாலை.

**மாணவர்கள்:** காலை வணக்கம்.. ரீச்சர்

**ஆசிரியர்:** காலை வணக்கம்....பிள்ளைகள். நேற்று தமிழ் கணிப்பீடு செய்ய வேண்டும்

பயிலும் கொண்டு வரச்சொன்னான். கொண்டு வந்தனிங்களோ? அதோட வீட்டு வேலையும் தந்தனான்.

ரமணி : மாலா இரண்டு பேப்பர் தான் கொண்டு வந்து இருக்கின்றா வீட்டு வேலையும் செய்தரேல்லையாம்.

ஆசிரியர்: மாலா இங்கே வா ஏன் வீட்டு வேலை செய்யவில்லை? இரண்டு பேப்பர் கானுமோ?

மாலா: அம்மா பத்து ரூபா தான் தந்தவ அந்த காசுக்குத்தான் வாங்கினனான். வீட்டுவேலை செய்ய கொப்பி இல்லை.

ஆசிரியர்: சாட்டுச்சொல்லாமல் வெளியில போய் நில். இப்பநீங்கள் கொப்பிகளை அடுக்கிப் போட்டு கட்டுரையை எழுதுங்கோ.

(இடைவேளை மணி அடிக்கின்றது. எல்லா மாணவர்களும்கை கழுவிவிட்டு சாப்பிடுகின்றார்கள்)

ரமணி: நீர் என்ன சாப்பாடு கொண்டு வந்தனீர்? நான் பிட்டும் முட்டைப் பொரியலும்.

ராதா: நான் கேக்கும் வாழைப்பழமும். சுதா என்ன சாப்பாடு?

சுதா: நான் பாணும் பட்டரும். இந்த மாலா கதவோரம் நின்று இங்கே பார்த்துக் கொண்டு நிற்குது. எங்களுக்குச்செமிக்காது. ''மாலா வெளியில் போய் விளையாடு பாப்பம்''.

கலா: ஏன் மாலா ஒரு மாதிரி இருக்கிறாய்? பசிக்கிறதா...இந்தா சாப்பிடு.

மாலா: வே..ண்...டா...ம்.... என்று வாங்கிச் சாப்பிடுகின்றாள்.

(மணி அடிக்கின்றத. அடுத்த பாடம் உடற்பயிற்சி ஆசிரியர் வரவில்லை. அதனால் பிள்ளைகள் மைதானத்தில் விளையாடப் போகின்றனர்.)

ரமணி: நாங்கள் கிளித்தட்டு விளையாடுவம்.

ராதா: நாங்கள் உங்களை மறிக்கிறம். நீங்கள் விளையாடுங்கோ.

சுதா: நாங்கள் விளையாடுவம்.

கலா: மாலாவையும் சேர்த்து விளையாடுவம்.அவளும் எங்களைப் போலைதானே....பாவம் மாலா.

ரமணி: நீங்கள் சேர்த்து விளையாடுங்கோ. எங்களுக்கு வேண்டாம்.

ராதா: எங்களுக்கும் வேண்டாம்

(இரு பிரிவினரும் வாதாடுகின்றன். அப்போதுமணி அடிக்கின்றது. எல்லோரும் மைதானததைவிட்டு வெளியேறுகின்றனர். எல்லாமாணவர்களும் மாலாவை ஏசுகின்றனர்).

சுதா: இந்த மாலாவால இண்டைக்கு விளையாடவில்லை.

ரமணி: இனிமேல் வகுப்பிலேயே இரு...விளையாடுற இடத்திற்கு வராதை.....எங்களையும் விளையாடவிடமாட்டாய். நீயும் விளையாட மாட்டாய்.....மக்கு.

(எல்லாப் பிள்ளைகளும் மாலாவை ஏசுகின்றனர்.மாலாவும் பேசாமல் போகின்றாள். இவ்வாறு

பாடசாலை விடுகின்றது. எல்லோரும் வீடுகளுக்குச் செல்கின்றனர்)

சுதா: மாலா நடந்துதான் வாறாள்!

றமணி: "அவள் அப்பிடித்தான்....நீ சைக்கிளை கெதியாய் உழக்கு".என்று கூறவும் சுதா மோதவும் சரியாக இருந்தது.

(றமணி அதை விலத்திக்கொண்டு வீடு நோக்கிச் செல்கின்றாள். மாலா சுதாவின் சைக்கிளைத் தூக்கிச் சரி செய்துவிட்டுப் பக்கத்திலிருந்த கடையில் தண்ணீர் எடுத்து வந்து கொடுக்கிறாள்.)

சுதா: என்ன திமிர் உனக்கு, எனக்குத் தண்ணீர் தர?ஆரும் உன்ரை கையாலை தண்ணி வேண்டிக் குடிப்பினமே.

(சுதா தண்ணீரை ஊற்ற, மாலா பேசாது நிற்க, அங்கு கூடிநின்ற எல்லோரும் சுதாவை வெறுத்து ஏசுகின்றனர் மாலா மெல்ல மெல்ல நகர, சுதாவும் எழுந்து செல்கிறாள்)

## காட்சி - 04

இடம்: பாடசாலை.

பாத்திரங்கள்-றமணி, மாலா, ஆசிரியர், சுதா.

பிள்ளைகள்: குட் மோர்ணிங் ரீச்சர்.

ஆசிரியா: குட் மோர்ணிங் சில்ட்றன்.

றமணி: நேற்று சுதா சைக்கிளோடை மோதிக் கீழே விழுந்விட்டாள். நாங்கள் பயத்திலை போட்டம்..

சுதா: மாலாதான் சைக்கிளை எடுத்து என்னையும் எழுப்பி விட்டதும் இல்லாமல் தண்ணியும் தாறா. அவவின்ரை திமிரைப் பாத்திரே? நாங்கள் அவாட்டை தண்ணி வாங்கிக் குடிப்பமோ?

சுதா: அவா மட்டும் பெரிய ஆளே ஒழுங்கா ஒன்றும் கொண்டுவரத் தெரியாது. ஒழுங்காய் ஒன்றும் செய்யத் தெரியாது. அவாவை ரீச்சர் புகழ்கின்றா.

கலா: சுதா நீ பேசாமல் இரு. உனக்கு பொறாமையாக இருக்கிறது. அதோட மாலாவை நீங்கள் ஒதுக்கிவைக்கிறீர்கள். அவளில என்ன இருக்கு பாவம் மாலா.

ஆசிரியர்: உங்களுக்கு என்ன பாடம் இப்ப எல்லோரும் வெளியில் போய் விளையாடுங்கோ.

(எல்லோரும் விளையாட மாலா மட்டும் கத்வோட நிக்கின்றாள்)

கலா: மாலா வாரும்... வந்து விளையாடும்.

மாலா: நான் இங்கேயே நின்று பார்க்கின்றேன். நீங்கள் விளையாடுங்கோ.

கலா: நானும் நீயும் விளையாடுவோம். வா?

( இருவரும் விளையாடுகின்றனர். )

## காட்சி- 05

இடம் : வீடு

(மாலா தனது தாய் கமலத்திற்கு தெருவில் நடந்தவற்றைக்கூறி அழுகின்றாள். அப்போது அங்கு சுதாவும் தாயும் வருகின்றனர்.)

மாலாவின் தாய்கமலம்:

நீ சொல்வது சரி பிள்ளை. அது அவைக்குத்தான் கூடாது. ஒரு நாளைக்கு எங்களுடைய நிலமை அவையளுக்கும் வரும்.

சுதா: மாலா இங்கே கெதியா வா.

மாலா: என்ன......?

சுதா-தாய்: என்ன, என்ர பிள்ளைக்குத் தண்ணீர் கொடுத்தியாம். உனக்கு எவ்வளவு துணிவிருந்தால் தண்ணி வாங்கிக் கொடுப்பாய்....?

கமலம் : அவள் ஒன்றும் உங்கள் பிள்ளைக்குப் பருக்கி விடேலை.விழுந்தாப்போல தான் தண்ணீர் கொடுத்தவளாம். என்ரை பிள்ளையைப் பிழை சொல்லாதையுங்கோ...

சுதா-தாய்: அவளையும் அவேன்ரை உடுப்பும்...வாடி நாங்கள் போவம்.
(அப்போது அங்கே கலா வருகின்றாள்)

சுதா: என்ன கலா...இந்தப் பக்கம்.

கலா: நான் மாலாட்டைப் போட்டுவாறன்.

சுதா: நானும் மாலாவை ஏசிப்போட்டுத்தான் வாறன்...

கலா: எல்லாம் நாளைக்குப் பாடசாலையில கதைப்போம்...போட்டுவாறன்...நேரம் போட்டுது.

மாலா: கலா..எங்கை இந்த நேரம்...

கலா: உன்னட்டைத்தான் வந்தனான்.நீ இனிச்சப்பாத்துக்கு ரீச்சர் அடிச்சால் என்னாலை வாங்க இயலாது என்று பிடிவாதமாய்ச் சொல்லு. . கணிப்பீட்டை நாளைக்குச்செய்து கொண்டு போ. இந்தா ∴பைல் மட்டையும் ரைப்பிங் ஷீற்றும்...

மாலா: ஏன் இதெல்லாம.... நான் கொப்பியில செய்யிறன்.

கலா: நீ சுதா, றமணியோட பிளங்காத....அதுகள் பொறாமை பிடிச்சதுகள்.... பணக்காறர்....பொல்லாததுகள்.

மாலா: ஓமடி...நீ சொல்லுறது சரிதான்.

கலா: நேரம் போகுது...நான் போட்டு வாறன்.

ஆசிரியர்: மாலா கெட்டிக்காரிதான். சுதா இப்படியெல்லாம் சொல்லக்கூடாது. நீர் எல்லாம் ஒன்றுதான். மாலா இல்லாவிட்டால் உம்முடைய நிலைஎன்ன ஆகும்? என்பதைச் சிந்தித்துப்பாரும். மாலாவைப்போல எல்லோரும் இருக்க வேண்டும்.

சுதா: மாலா. என்னை மன்னித்துவிடு. நாங்கள் செய்தது தப்புத்தான்.

எல்லாப் பிள்ளைகளும்:

மாலா எங்களுக்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டுத்தான்..... மாலாகெட்டிக்காரி.

ஆக்கம்
வி.சோமளு.

# எதிர்காலத்திற்கான சிறுவர்கள் சந்திப்பு



ஜெ.தற்பரன்
நிகழ்ச்சித்திட்ட அலுவலர்,
சிறுவர் பாதுகாப்பு. யாழ்ப்பாணம்.

சிறுவர் தொடர்பாடல் குழு (KIDS IN TOUCH) இன் ஏற்பாட்டில் எதிர் காலத்திற்கான சிறுவர்களின் வேலைத்திட்டம் தொடர்பான மகாநாடு ஒன்று எதிவரும் ஏப்ரல் மாதம் 21-26ம் திகதி வரை கண்டியில் நடை பெறவுள்ளது. இச்சந்திப்பில் கலந்து கொள்வதற்கென இலங்கையின் ஒன்பது மாவட்டங்களில் இருந்தும் தலா பத்து சிறுவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். சிறுவர் தொடர்பாடல் மீள நினைவூட்டல் கருத்தரங்கு ஒன்று அண்மையில் யாழ் நகர மண்டபத்தில் நடைபெற்ற போது, சிறுவர் தொடர்பாடல் குழுதிட்ட அலுவலர் சியாமிலி அபயசேகர மற்றும் சிறுவர் பாதுகாப்பின் நிகழ்சித் திட்ட அலுவலர் ஜெ.தற்பரன் ஆகியோரால் தெரிவிகப்பட்டது.

நடைபெறவுள்ள இம் மகாநாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறுவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேசிய ரீதியில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்படவுள்ளது. மேலும் மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கண்காட்சியும் நடைபெறவுள்ளது. இம் மகாநாட்டில் கலந்து கொள்வதற்கென யாழ் மாவட்டத்தில் இருந்து யாழ் இந்துக்கல்லூரி, திருமறைக் கலாமன்றம் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், நபீல்ட் பாடசாலை, சென் அன்ரனீஸ் கல்லூரி, இன்பச்சோலை, சிறுவர் ஊடகத்துறை ஆகிய சிறுவர் தொடர்பாடல் குழுக்களில் இருந்து சிறுவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அ:தனுஷா.

---

## அவன் உயர்ந்து.........

தலையைத் தாழ்த்திக் கொள்கிறான் பாலன். நாளைக்கு அதையும் கொண்டுவா... போயிரு...உனக்கொரு படிப்பு..

வாத்தியார் மேலும் இரைந்தார். தலையைத் தாழ்த்திக் கொண்டு பாலன் தனது இருப்பிடத்திற்குச் செல்லும்போது மாணவர்களின் பகிடியும் சிரிப்பும் அவன் மனத்தைக் குடைகின்றன. அவன் யோசிக்ன்றான். அவன் கண்ணில் தாயின் கிழிந்த சேலை, தந்தையின் வியர்வை, தங்கை, தம்பியின் சோர்ந்த முகங்கள்.... அவனுள் ஒரு முடிவு எழுகின்றது.

நான் படிக்கத் தகுதியற்றவன். நான் மற்றவர்களினால் எள்ளிநகையாடப் படுகின்றேன். என்னைப் போல் எனது சகோதரர்களும் இந்நிலைக்கு ஆளாகக் கூடாது. நானும் அப்பாவுடன் உழைக்கப் போகின்றேன். உழைத்து குடும்ப வறுமையைப் போக்கி எனது சகோதரர்களை நற் பிரஜைகளாக்கப் போகின்றேன். அவன் மனம் சபதம் எடுதத்து. அவன் கண்முன் எல்லா இடமும், எல்லாத் தேசமும் ஏன்... சகல பிரச்சினைகளுமே தூசுக்குச் சமனாகக் காணப்பட்டது. அவன் முடிவெடுத்து விட்டான். அவன் உயர்ந்துவிட்டான்.

ச.சகாயதேவராஜன்
(யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்.)

# காலத்தின் கோலம்

பிறந்தோமே இப்புவியில்
சிறுவராய் இருக்கும் போது அன்பாக இருந்தார்கள்
வளர தொடங்கும் போது பலவற்றை இழந்தோம்
அன்புக்காக ஏங்கினோம் எம்மனதை ஆறுதல் படுத்தினோம்
தலை விதிப்படி நடக்கட்டும் என்று

காலத்தின் சக்கரம் வேகமாக நகர்ந்தது
ஆனாலும் துன்பம் பன்மடங்காகக் கூடியது
துன்பத்தின் சுமையால் வாழ்க்கையை வெறுத்தோம்
வாழப்பிடிக்கவில்லை சாவை விரும்பினோம்
ஆறுதல் கூறுவதற்கு யாரும் இல்லாது ஏங்கினோம்

ஆனால் திடீர் சம்பவத்தால் மனம் மாறியது
இதனால் வாழ்க்கையின் இலட்சியத்தை உணர்ந்தேன்
வாழத்துடித்தேன் துன்பத்தை மறந்தேன்
என்னையே முழுமையாக இலட்சியத்தில் செலுத்தினேன்
முடிவில் முன்னெற்றம் கண்டேன்

இதில் இருந்து கற்றேன்
சிறுவருக்கு உரிமையுண்டு என்று
இதை உணரும் போது வாழ விருப்பம் வரும்
இவ்வாறு நாம் எமது வாழ்வில்
காலத்தின் கோலத்தை அறிய முடியும்.

ஆக்கம்
பே.ஆன் றூபினி

---

5ம் பக்கத் தொடர்ச்சி............

விடைகள்..

1. இத்தாலியிலுள்ளது
2. சவூதியரேபியா
3. பின்லாந்து
4. அமெரிக்கா
5. அவுஸ்திரேலியா
6. கியூபா
7. திபெத்
8. ரஷ்யா
9. திரைப்படத்துறை
10. அமெரிக்கன்
11. 45 இலட்சம்

# நிம்மதிக்காக...............

(சிறுகதை)

"அம்மா நீங்கள் என்ன சொல்லுறியள்." அதிர்ந்து போய்க்கேட்டான் பிரவீண். மௌனமாக இருந்த பார்வதி பெருமூச்சு விட்டுக் கொண்டே அணை உடைக்கத் தயாராக இருந்த கண்ணீரை அடக்கிக் கொண்டாள்.

"பின்ன என்னடா செய்யிறது. ஒவ்வொரு நாளும் உந்த மனிசனோடை என்னாலை ஆட ஏலுமே. நான் காசுக்கு எங்கையடா போவன். கையிலை கழுத்திலை இருந்தது எல்லாம் குடிச்சு அழிஞ்சே போச்சு. இனியும் ........" கூற முடியாமல் முழங் ...ாலுக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டு ...மத் தொடங்கினாள். பிரவீணுக்கு நெஞ்சு ...ந்தது. அவன் அம்மாவை அழத்தான் ...ிருக்கிறான், சிரித்து பார்க்கவே இ... இதற்கெல்லாம் காரணம் அப்பா குண...தான்

எ... ...தாலும் குடி, சிகரட்தான். ஒரு வேலையும் ...ல்லாதவர். ஒவ்வொரு நாளும் எப்படியா...துபணம் கொடுத் தாகவேண்டும். இல்லையேல் பிரவீணும், பார்வதியும் அடி, உதை வாங்கியதில் துடித்துப்போவார்கள். பிரவீண் பதின்மூன்று வயதுச் சிறுவன். படிப்பதில் மிகவும் ஆர்வ முள்ளவன். ஆனால் வீட்டுப் பிரச்சனைகளால் மிகவும் குழம்பிப் போயிருந்தான்.

"என்னப்பா கடுமையா யோசிக்கிறாய்? தாய் கேட்க கண்ணீரோடு நிமிர்ந்தான்."அம்மா படிப்பை விட்டுட்டு வேலைக்குப் போவமெண்டால் நான் எப்ப... அம்மா..... படிப்பை என்னால விடேலா... கடவுளே படிப்பை விட்டுட்டு வேலைக்... போனால் எல்லாரும் பழிப்பினம். அ...... பிஞ்சு உள்ளத்தில் வேதனை கன்...றது உதடுகளை அழுந்தக் கடித்து அழுகையைக் கட்டுப்படுத்தினான். அவனது வேதனையைச் சகிக்க முடியாமல் பார்வதி விருட்டென்று எழுந்து போனாள். பிரவீணும் ஒன்றும் பேசாமல் நாளைய பரீட்சைக்கான தமிழ் புத்தகத்தோடு தரையில் அமர்ந்தான். புத்தகம் கையிலே இருந்ததே தவிர நினைவலைகள் கொடி கட்டிப் பறந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை நேரமும் பத்துமணியாகி விட்டிருந்தது.

' பா...ர்வதி.... இண்டைக்குக் குடிச்சுப் போட்டேன்..... குடிக்க.. அதான் சிகரெத் வாங்க காசு வேணும் கொ....ண்டு வா...." என்ற படி வார்த்தைகள் தடுமாற சொற்கள் தவற நடு வீட்டில் பொத்தென்று விழுந்தார் குணசேகரன். பிரவீண் மெதுவாக எழுந்து சமயலறைப்பக்கம் நழுவினான். குணசேகரன் தன் சிவந்த விழிகளை விரித்து தட்டுத்தடுமாறி எழுந்து தள்ளாடித் தள்ளாடி பார்வதி பக்கம் போனார். "ஏன்டி சொன்னா கேக்காது கொண்டாடி காசை....." அவளது முகத்துக்கு நேரே சீறினார். சாராய வாசம் குப்பென்று வீசியது. வெறுப்போடு முகத்தைத் திருப்பினாள். குணசேகரனுக்குக் கோபம் வெடித்தது. அவளது தலைமயிரை எட்டிப்பிடித்து "போடி.... சனியன்..." தள்ளி விட சமயலறைக் கட்டோடு நெற்றி மோத ரத்தம் பீறிட்டது.

"அம்மா...." துடிதுடித்துப்போய் தாயை அணைத்தான் பிரவீண். அவனது மார்பு தடதடவென்று அடித்துக் கொண்டது. குணசேகரன் மீண்டும் அவளருகே போனார். பிரவீண் வெறி கொண்டவனைப் போல பாய்ந்து சென்று படாரென்று தள்ளி விட்டான். தள்ளாட்டத்தில் இருந்தவர் அவன் தள்ளியதும் மயங்கிச் சரிந்து பிதற்றினார்.

தரதரவென்று அவரை இழுத்துக் கொண்டு போய் அறையில் போட்டுப் பூட்டினான். ஆழ்ந்த பெருமூச்சொன்றை உதிர்த்தான். அன்றைய பொழுது மௌனமாகவே கழிந்தது. பார்வதிக்கு நெற்றி வீங்கியிருந்தது. மறுநாள் காலை நேரமாகியும் பாடசாலைக்கு வெளிக்கிடாமல் இருந்தான் பிரவீண். பார்வதி யோசனையோடு அவனது அறையை எட்டிப்பார்த்தாள். ஒரு கணம் இதயம் வெடித்தது போலிருந்தது. சாரமும் கட்டிக் கொண்டு மண்வெட்டியை வைத்துவிட்டு புத்தகங்களை உரைபாக்கில் போட்டுக் கட்டிக் கொண்டிருந்தான். ஆம்..... தாயின் நிம்மதிக்காக.... ஆசைக்காக...... பிரவீண் வேலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். பிஞ்சு உள்ளத்தில் ஆறாத றணங்களாகி விட்ட குடும்ப கஸ்டத்தை நீக்க படிப்பைத் தியாகம் செய்துவிட்டான் பிரவீண்.

ஆக்கம்

பத்மநாதன் நிலானி

---

**வர்ணந்தீட்டுங்கள்...**

சிறந்த வர்ணத்திற்கு பரிசு வழங்கப்படும்

அனுப்ப வேண்டிய இறுதித்திகதி 20.03.2003

"துளிர்" சஞ்சிகை
சிறுவர் ஊடகத்துறை,
18, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.



# ஓவியம் பேசுகின்றது.

## இல.02



படத்தினை உற்று நோக்குங்கள சிந்தனைகளை நான்கு வரிக்குள் அழகாக கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள் சிறந்த கவிதைகள் எமது அடுத்த இதழில் பிரசுரமாகும்.

ஆக்கங்கள் வந்து சேரவேண்டிய
இறுதித்திகதி
23.03.2003.
அனுப்ப வேண்டிய முகவரி

"துளிர் சஞ்சிகை"
வட இலங்கைப்பத்திரிகையாளர் சங்கம்
18, குமாரசாமி வீதி
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

*Smart Prints* (Pvt.) Limited. 717, K. K. S Road, Jaffna.